1975 நவம்பர் 11]

## பெற்ருேர்—ஆசிரியர் சங்கம்

* 279 வின—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் உள்ள எல்லா எலிமெண்டரி பள்ளிகளிலும், செகண்டரி பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், பெற்ருேர்—ஆசிரியர் சங்கம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) கட்டாயப்படுத்தும் செயற்குறிப்பு இல்லை. ஏற்படுத்துவதற்கான பரிந்துரை வழங்கப்பட்டு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister for Education and Tourism whether any awards have been given to the Schools which are maintained by the Parents-Teachers Association in a good manner in the State?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பெற்ருேர்கள்-ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில் சாதாரணமாக பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றவர்களைப் பாராட்டுகிற வகையில் அவர்களுக்கெல்லாம் மாணவர்—பெற்ருேர்—ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில் சுவர் கடிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 5 பள்ளிகள், சிறந்த பள்ளிகளாக பெற்ருேர்கள்-ஆசிரியர்கள் சங்கங்கள் வைத்து ஆசிரியர்களுக்கும் பொது மக்களுக்கும் சிறந்த தொடர்பை ஏற்படுத்தியவர்களை பாராட்டுகிற வகையில் சுவர் கடிகாரம் வழங்கப்பட்டு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, இந்த பெற்ருேர்கள்—ஆசிரியர்கள் சங்கங்கள் சில இடங்களில் நன்ருக செயல்பட்டு வருகின்றன. அவைகளை ஊக்குவிக்கின்ற வகையில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் ஒரு குறிப்பிட்ட சிறப்பு நிதியை ஒதுக்கி அந்த அந்தப் பெற்ருேர்கள்-ஆசிரியர்கள் சங்கங்கள் செயல்படுகிற ஊர்களில் எங்கு நன்ருக் செயல்படுகின்

றனவோ அவைகளுக்கு ஈட்டு மானியம் கொடுப்பீர்களேயானல் சுற்றுச் சுவர் அமைத்தல், தோட்டம் அமைத்தல் போன்ற பள்ளி மேம்பாட்டிற்கான பணிகளை மேற்கொள்ள முடியும். அரசாங்கம் இதனை யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மானியம் வழங்கும் யோசனையை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஏனென்றால், இவைகளுக்கு மானியம் வழங்குவதில்லை. பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கங்கள் சார்பாக பள்ளிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்காக பள்ளி சீரமைப்பு மாநாடுகள் நடத்தும்போது பொதுமக்களின் தொடர்பு இந்தப் பள்ளிகளுக்கு ஏற்படுத்தவும் இந்தச் சங்கங்கள் பாடுபடுகின்றன. ஆனல், பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கம் ஒரு குறிப்பிட்ட தொகையை ஈட்டித் தரும்பொழுது ஈட்டு மானியத் தொகையாக ரூ. 20 ஆயிரம் தந்தால் அரசாங்கம் ரூ. 20 அல்லது ரூ. 30 ஆயிரம் கூடுதல் போட்டால் ரூ. 50 ஆயிரத்தில் கட்டடம் கட்டும் முயற்சிக்கு ஊக்கம் தருகிற வகையில் கொடுக்க முடியும். ஆனல், பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கங்களை நடத்துவதற்கு மானியம் தருவதற்கில்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கங்கள் இருப்பது நல்லது என்பதை அரசாங்கம் கருதித்தான் இதை எல்லா இடங்களிலும் ஊக்குவிக்க சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இது நல்ல காரியமாக இருப்பதால் எல்லா இடங்களிலும் கட்டாயம் இம்மாதிரியான அமைப்புக்களை உண்டாக்க வேண்டுமென்றும், அதற்கான விதிமுறைகள் ஒழுங்குமுறைகளைத் தயாரித்து உருவாக்குவதற்கான, முறையான உத்தரவை ஏன் போடக் கூடாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்படி இரண்டு ஆண்டுக் காலமாக அதிக ஊக்கம் காட்டியதன் விளைவாக 10,881 பள்ளிகளில் பெற்றோர்-ஆசிரியர்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டு பணியாற்றி வருகின்றன. உயர்நிலை பள்ளிகளைப் பொறுத்த வரையில் 1,806 உயர்நிலைப் பள்ளிகளிலும், 9,071 ஆரம்பப் பள்ளிகளிலும் பயன்பட்டு வருகின்றன. மேலும் எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும், உயர் துவக்கப் பள்ளிகளிலும் பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கங்கள் இருக்க

*1975 நவம்பர் 11]*

வேண்டும் என்பது நமது கொள்கையாகும். அந்த வகையில் தான் மாவட்டக் கல்வி அதிகாரிகளும், மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளும் இதில் அதிக ஊக்கம் காட்டவேண்டுமென்று அவர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

### *Buildings for High Schools*

* 280 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to stated whether there are proposals under the consideration of the Government to put up additional building for the Nattalam Government High School in Kanyakumari district?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆம், கட்டிடம் கட்டுவதற்கு தேவையான கருத்துரு உருவாக்குவது குறித்து மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

* 281 வினா—**திரு. மே. சி. தூயமணி:** மாண்புமிகு கல்வி, சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரிலுள்ள அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்குத் தனிக் கட்டடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

* 282 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct additional buildings for the High School at Berikai Town in Hosur taluk; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.